Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

# CHANDEE RAHASYAM
## OF
## Mahakavi Sri Nilakanta Dikshithar



Tamil Transliteration and Translation

**Sri A.Padmanabhan and Sri S.N.Sastri**

Computer Editing and Compilation in book form

**Sri P.S.Natarajan**

Published by

**MAHAKAVI SRI NILKANTA DIKSHITHAR FOUNDATION**

21 New, (Old 10) Fifth Trust Cross Street,
Mandavelipakkam, Chennai 600028

2005

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

# CHANDEE RAHASYAM
## of
# Mahakavi Sri Nilakanta Dikshithar

Tamil Transliteration and Translation

**Sri A.Padmanabhan and Sri S.N.Sastri**

Computer Editing and Compilation in book form

**Sri P.S.Natarajan**

Published by

**MAHAKAVI SRI NILKANTA DIKSHITHAR FOUNDATION**

21 New, (Old 10) Fifth Trust Cross Street,
Mandavelipakkam, Chennai 600028

2005

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

All Rights reserved

First Edition May 2005

Price Rs.20

US $ 3

Copies can be had from

1. Dr.P.S.Natarajan,
   Mahakavi Sri Neelakanta Dikshithar Foundation,
   New 21, Old 10, Fifth Trust Cross Street,
   Mandavelipakkam, Chennai 600028.
   Tel: 24942687

2. Sri G.Venkataraman,
   Door No.5.Subramanian St.. W.Mambalam
   Flat No.T-1 III Floor ,"Manasa"
   Chennai 600033
   Tel: 4718693 , 4716484

3. Sri P.G.Ganesan
   Plot 22, A.G.'s Staff Colony,
   2 First Street, Puzhuthivakkam,
   Chennai 600091
   Tel: 22580318

Printed at
Kumaran Graphics
37 Periyapalli Street,
Mandavelipakkam Chennai 600028
Tel:24943268

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

# சண்டீரஹஸ்யம்

## முன்னுரை

### மகாகவி ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் அறக்கட்டளை

பதினேழாம் நூற்றண்டில் தோன்றிய சிறந்த ஆட்சி வல்லுனரும்; தூயத்திருத் தொண்டரும், கவிஞரும், மதுரை மன்னன் திருமலைநாயக்கனின் அமைச்சருமாக இருந்த ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரின் நினைவை என்றும் மறவாதிருக்கச் செய்யும் பொருட்டு மகாகவி ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் அறக்கட்டளை நிறுவப்பட்டது. மதுரையம்பதியில் அருள் பாலிக்கும் ஸ்ரீ மீனாக்ஷியின் இறையருளை வாழ்க்கையில் நேரில் அனுபவித்த மகானாகக் கருதப்படுகிறார் இவர். வடமொழிப்பயிற்சி உ.டை.யவர்களுக்கு அவரை அறிமுகப்-படுத்த வேண்டிய தேவையில்லை. பதினேழாம் நூற்றண்டின் வடமொழி இலக்கிய உலகிலே தலைசிறந்த கவிகளுள் ஒருவராக விளங்கினார்.

அறக்கட்டளையின் நோக்கங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன:-

1) ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரின் பிறந்த, மற்றும் நினைவு நாட்களை சிறப்பான முறையில் கொண்டாடுதல்.

2) அவர் அருளிய எல்லா கிரந்தங்களையும் (இயன்ற வரை மொழி பெயர்ப்புடன்) வெளியிடுதல்.

3) வருடாந்தர நினைவு சொற்பொழிவுகள் நடத்த ஏற்பாடு செய்தல்.

4) அவர் தமது இறுதி நாட்களில் தங்கியிருந்த பாலாமடையில் அவர் நினைவு சம்பந்தப்பட்ட நிகழ்சிகள் யாவும் நடைபெறுவதற்கு வசதியாக ஒரு நினைவு கட்டிடம் கட்டுதல்.

5) பாலமடையிலுள்ள அவர் அதிஷ்டானத்தைப் பராமரித்து நித்ய பூஜை நடத்துதல்.

அறக்கடளையின் நிர்வாகிகள்:-

P.A.சேஷன் (தலைவர்): P.S. நடராஜன் (செயலாளர்): சுப்பிரமணியன் (பொருளாளர்): மற்றும் அங்கத்தினர்:

1 P.M.ராமசந்திரன் 2 G.வெங்கடராமன் 3 V.சங்கரன்
4 P.S.அனந்தநாராயணன் 5 P.C.மீனாட்சுசுந்தரம்
5 P.R.கோபாலன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அறக்கட்டளையின் குறிக்கோளை நிறைவேற்றும் பொருட்டு முதல் பிரசுரமாக அவரருளிய ஆனந்த-ஸாகரஸ்தவம் அவரின் ஆராதனை தினத்தன்று (31-1-2001) வெளியிடப்பட்டது.

துரிதத்தயாரிப்பில் இருந்து வரும் ஸ்ரீ நீலகண்ட-தீக்ஷிதரின் அற்புதப்படைப்பான சிவலீலார்ணவ மஹாகாவ்யம் விரைவில் வெளியிடப்படும். அன்னை பராசக்தியின் மகிமையை விளக்கும் சண்டீ ரகஸ்யம் இரண்டாவது பிரசுரமாக இப்பொழுது வெளியிடப் படுகிறது,

இந்நூலின் தமிழாக்கம் ஸ்ரீ S.N. சாஸ்த்ரி அவர்களின் உதவியுடன் ஸ்ரீ A. பத்மனாபனாலும், தொகுப்பு மற்றும் புத்தகவடிவாக்கம் கணினி மூலம் ஸ்ரீ P.S. நடராஜன் அவர்களாலும் செய்யப்பட்டுளது

சிறந்த வடமொழிக் கவிஞரும் ஆழ்ந்த சிவபக்தியுடன் அத்வைத தத்துவத்திற்கு ஒளிவிளக்காய் திகழ்பவருமான மகான் ஸ்ரீ அப்பையய தீக்ஷிதர் அவர்கள் வம்சத் தோன்றலான ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் அவர்கள் தமது முன்தோன்றியாரைத் தொடர்ந்து வடமொழி இலக்கியத் தொண்டும் சமயத் தொண்டும் ஆற்றினார்கள். மகாகவி ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் அவர்கள் இடைக்கால வடமொழி இலக்கியவுலகில் முதன்மையானவர்களில் ஒருவர். தமது பல்வேறு வகையான படைப்புக்-களினாலும் அவைகளின் இலக்கியத் தரத்தினாலும் வடமொழி இலக்கியத்தில் கால்மெல்லாம் தலைசிறந்து விளங்கும் இலக்கியவாதிகளுடன் அவர் திகழ்வார். ஆனால் அவர் இந்தியாவின் தென்கோடியில் இருக்க நேர்ந்ததாலும், பிற்காலத்தில் வடமொழி இலக்கியத்தின் மீதுள்ள ஈடுபாடு வெகுவாக குறைந்ததாலும், அவருக்குத் தனது அறிவுத்திறன், சாதனை இவற்றால் கிடைக்க தகுந்த அங்கீகாரம் கிடைக்காமல் ஆயிற்று. அவரது பெயர் பரவலாக அறியப்பட்டிருக்கும் தென்னாட்டில் கூட அவரது முதுமொழி சார்ந்த வேடிக்கையான எழுத்துக்களில் தான் ஈடுபாடு இருந்து வருகிறது. ஆனால் அவரை ஒரு தலைசிறந்த இலக்கியச் சிற்பியாகவே நோக்க வேண்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் பற்றியும் அவரது படைப்புக் களையும் அண்மைக்காலத்தில் வடமொழி அறிஞர்கள் ஆழ்ந்து படிக்க மேற்கொண்டிருப்பது இவ்வேளையில் மனநிறைவைத் தருகிறது. ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் எழுதிய நூற்களின் எண்ணிக்கை பற்றிய முழுத் தகவல் நம்மிடம் இல்லை. எனினும் அவர் இயற்றியதாகப் பொதுவாக ஏற்றுக்-கொள்ளப்பட்ட நூற்களில் சிறியவையும் சற்று பெரியவை-யுமாக பலதும் அச்சேறிவிட்டன. ஒரு சில வெளி-வரவில்லை. மற்றும் சில கிடைக்கவில்லை. அவரது படைப்புக்களைப் பற்றி ஒரு விமர்சன மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பம் இதுவல்லவெனினும் அவரது பல்துறைப் புலமை, நகைச்சுவை, சொல்லாட்சித் திறன், ஆழ்புலமை, விரிவான அறிவு விளக்கம், இவை எல்லாவற்றுக்கும் மையமாய் சநாதன தர்மத்தில் அவருக்-கிருந்த நிலையான நம்பிக்கை இவைகளை அவரது படைப்புக்களிலுள்ள சிறப்புப் பண்புகள் என்று சுருக்கமாகச் சொல்லலாம்.

ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களின் ஆரம்ப காலப் படைப்புக்களில் ஒன்றாகக் கருதப்படும் சண்டீரஹஸ்யம் எனும் துதிப்பாடல் சர்வ சக்தி வாய்ந்த சண்டிகையின் மாண்பினையும் மகிமையையும் எடுத்துரைக்கின்றது. வசந்த திலக விருத்தத்தில் 36 செய்யுட்களால் ஆக்கப்பட்டது இத்துதி-ப்பாடல். ஸ்ரீ தீக்ஷிதரின் படைப்புக்-களில் மிகுந்த பற்றுடைய ஸ்ரீ பி.எஸ். கிருஷ்ணன் அவர்கள் இத்துதிப்பாடலைப் பற்றி தமது ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரும் அவருடைய காவியங்களும் எனும் ஆராய்ச்சி நூலில் இவ்வாறு கூறுகிறார். அழகிய செய்யுட்கள் முக்கியமாக சண்டீரஹஸ்யத்தில் சில இருக்கின்றன. என்றாலும் பால்ய திசையில் சற்று முயற்சியுடன் செய்யப்பட்டவை என்றே தோன்றுகின்றன. புராண இதிகாசங்களில் அவருக்கிருந்த ஒரு அபாரமான தேர்ச்சி நன்கு விளங்குகின்றது. ஸௌந்தர்யலஹரி, லலிதா-ஸஹஸ்ரநாமம், தேவிமஹாத்மியம் ஆகியவற்றிலிருந்து கவிப்-பொருளை எடுத்து மிக நேர்த்தியாக தனக்கே உரிய கவிதை, கற்பனைத்திறனைப் பயன்படுத்தி இத்துதிப்பாடலை இயற்றி இருக்கின்றார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அன்னையே. பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர் சிறியாதான நுண்பொடி அளவில் நின்சக்தியை ஒரே ஒருமுறை அடையப்பெற்ற காரணத்தினால் மட்டுமே நூற்றுக்கணக்கான வேத வாக்கியங்களினால் போற்றத் தக்க பரமாத்ம நிலையை எய்தினார் எனின் தேவியே, நின் மகிமையை போற்றுவது எங்ஙனம் இயலும். (சண்டீரஹஸ்யம் / பாடல் 1) என்று முதல் பாடலிலேயே தேவியின் மகாத்மியத்தை வியந்து, புகழ்ந்து, போற்றிப்பாடுகிறார்.

உலகம் முழுவதையும் பாசக்கயிற்றினால் வசப்படுத்தி தன் ஆளுமையின் கீழ் வைத்திருக்கும் எமன், தேவியின் கூந்தலாய், பின்னல் கட்டுகளாய் பிணைக்கப்பட்டிருக்-கின்றான் என்றால் தேவியின் வலிமையை என்னவென்று சொல்வது, (பாடல் / 4) சூரியன், சந்திரன், இந்திரன், பூமி மற்றும் பிற தேவர்களும் கடவுட்களும் எல்லோருமே தேவியின் மொத்த உருவின் கூறுகளாகவே அமைந்திருக்கின்றனர். பிரபஞ்சம் முழுவதையும் தன்னகத்தே அடக்கிய பிரபஞ்ச நாயகியாக திகழ்கிறாள் அன்னை. எதிரிகளான அசுரர்களை அழிக்கவும் அதே சமயம் துதித்து போற்றும் பக்தர்களை அருள்பாலிக்கவும் செய்யும் தேவியின் இருவித வெவ்வேறான செயல்களை ஒரு பூட்டினால் அடைக்கவும் திறக்கவும் செய்வதைப்போன்று இரு-வகையாக செயல்படுவதை உவமை நயத்துடன் விளக்குகிறார் ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் (பாடல் 27).

துதிப்பாடல்கள் மூலமும் தோத்திரங்கள் மூலமும் கற்றறிந்தோர் மட்டும் வழிபடும் கடவுளாக தேவி தோன்றவில்லை, கருணைக்கடலாய் விளங்கும் அன்னை அறிவற்றோர், ஆதரவற்றோர் என தன்னை அண்டியோர் எல்லோரையும் அருள்பாலிப்பதை தேவியின் மிகப்-பெரிய தந்திரம் என்று பக்தர்கள் எல்லோருக்கும் ஊக்கமளிக்கும் வகையில் பாடித் துதிக்கின்றார். (பாடல் / 33) தாயை தஞ்சமாகப் புகுந்து வணங்கிப் பெற-வேண்டியவை யாவற்றையும் தேவர்கள் பெற்றுக் கொண்டுவிட்ட போதிலும் வற்றாத மங்கலமாய்த் திகழும் பராசக்தியை துதித்து தனது எஞ்சியிருக்கும் நாட்களை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பயனுடையதாக்கிக் கொள்வேன் என்று கூறி இத்துதிப்-பாடலை முடிக்கின்றார்.

பக்திப் பரவசத்திற்கு ஆட்பட்டு உணர்வு பூர்வமாய் கவிதையின் இனிமை இழையோட தேவியிடம் தமக்கிருக்கும் உள்ளார்ந்த ஈடுபாட்டினை இத்துதிப் பாடலில் வெளி-யிட்டிருக்கிறார் ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் அவர்கள். வடமொழி பயில்வோர்க்கு பொதுவாகவும் ஸ்ரீ தீக்ஷிதரின் படைப்புக்களில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு குறிப்பாகவும் இம்மொழி பெயர்ப்பு நூல் பயனுடையதாக இருக்கும் என்று நம்புகிறோம். மொழி பெயர்ப்பு, வெகுவாக வடமொழி மூலத்தை அடியொற்றி இருப்பினும் பொருள் தெளிவிற்காக மூலத்தை முற்றிலுமாக பற்றிக்கொள்வது மிகத் தேவையான இடங்களில் சற்று தளர்த்தப்பட்டிருக்கிறது.

P.A.சேஷன்
தலைவர்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

# श्रीः
# ஸ்ரீ:
# चण्डीरहस्यम्
# சண்டீரஹஸ்யம்

यच्छक्तिलेशसकृदर्पणपात्रभाव-
मात्रादपि द्रुहिणशौरिमहेश्वराणाम्।
प्राप्तो यदि श्रुतिशतैः परमात्मभाव-
स्तामम्ब देवि भवतीं किमिति स्तुवन्तु।।१

யச்சக்திலேஶஸக்ருதர்பணபாத்ரபாவ-
மாத்ராதபி த்ருஹிணஶௌரிமஹேஶ்வராணாம்.
ப்ராப்தோ யதி ஶ்ருதிஶதை: பரமாத்மபாவ-
ஸ்தாமம்ப தேவி பவதீம் கிமிதி ஸ்துவந்து..(1)

1) அன்னையே ! பிரம்மா, விஷ்ணு சிவன் ஆகிய மூவரும் மிகச்சிறியதான நுண்பொடியளவில் நின் சக்தியை ஒரே ஒரு முறை அடையப்பட்ட காரணத்தால் மட்டுமே நூற்றுக்-கணக்கான வேதவாக்கியங்களினால் போற்றத்தக்க பரமாத்ம நிலையை எய்தினாரெனில், தேவியே நின் மகிமையை போற்றுவது எங்ஙனம் இயலும் ?

மும்மூர்திகளுக்கான குணங்கள் முறையே, பிரதானமாக: பிரம்மா- ரஜோகுணம், விஷ்ணு - ஸத்வகுணம், சிவன்- தமோகுணம், இவை தேவியினின்றும் பெறப்பெற்றன. காண்க: ஸௌந்தர்யலஹரி - ஸ்லோகம் - 2)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

कृत्वा मुखं पशुपतिर्भवतीं किलैकां
निर्माति पालयति हन्ति जगन्ति देवः।
तज्जामितावियरिवृत्तिकृते तमेव
शम्भुं मुखं कृतवती भवतीति मन्ये।।२

*க்ருத்வா முகம் பஶுபதிர்பவதீம் கிலைகாம்*
*நிர்மாதி பாலயதி ஹந்தி ஜகந்தி தேவ:.*
*தஜ்ஜாமிதாவிபரிவ்ருத்திக்ருதே தமேவ*
*ஶம்பும் முகம் க்ருதவதீ பவதீதி மந்யே..2*

2) அன்னையே! பசுபதிப்பெருமான் உன்னை அருகில் வைத்துக்கொண்டு உலகங்களத்தனையும் படைத்து, காத்து, அழித்து முத்தொழில்களையும் புரிகின்றான் போலும்! ஆனால் உண்மையில் (ஆதிசக்தியான) நீயே தான் உங்கள் கணவன் - மனைவி உறவில் நிலை-மாற்றத்தை தவிர்க்க அம்மகேசனை முன்னிலைப் படுத்தி இருக்கின்றாய் என்று நான் எண்ணுகிறேன்.

(சக்தியின் சலனத்தினாலேயே பரம்பொருளானது ஐந்தொழில்கள் புரியும் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், ஈஸ்வரன், ஸதாசிவன் என்ற ஐவரைத்தோற்றுவித்தது. இதுகாறும் விளங்காது இருந்த பரம்பொருள் சக்தியின் துடிப்பால் வடிவம், குணம் செயல் முதலியவற்றை பெற்று உருவகப்படுத்தக்கூடியதாயிற்று. பரம்பொருளை ஊக்கிய சக்தியாய் இருப்பவள் தேவி.
காண்க: லலிதா ஸஹஸ்ரநாமம் 548 - 112)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

विश्वं नियच्छति विशृङ्खलचेष्टितो यः
सोऽपि त्वया नियमनीय इति स्फुटं नः।
वैवस्वतं चिकुरभावजुषं यदम्ब
बध्नासि वेणिकबरीग्रथनादिभेदैः।।३

*விஶ்வம் நியச்சதி விஶ்ருங்கலசேஷ்டிதோ ய:*
*ஸோ"பி த்வயா நியமநீய இதி ஸ்புடம் ந:.*
*வைவஸ்வதம் சிகுரபாவஜுஷம் யதம்ப*
*பத்நாஸி வேணிகபரீக்ரதநாதிபேதை:..3*

3) தாயே எவ்விதத் தளைகளாலும் கட்டுறாது, உலகு முழுவதையும் தன் ஆளுமையின் கீழே வைத்திருக்கின்ற எமன் கூட உன்னால் வசப்படுத்தப்பட்டவன் என்பது எங்களுக்குத் தெளிவாகவே தெரியும். ஏனெனில், நீ அந்த எமனை உன் கூந்தலாக எடுத்து விதவிதமான பின்னல் கட்டுகளினால் பிணைத்திருக்கின்றாய்.

(அஸுரர்களால் தேவர்கள் தோற்கடிக்கபட்டனர். எல்லா தேவர்களையும் ஜெயித்து மஹிஷாஸுரன். இந்திரப்பதவி எய்தினான். தோல்வியுற்றதேவர்கள் பிரம்மாவை முன்னே கொண்டு பரமசிவனிடமும் மஹாவிஷ்ணு-விடமும் சென்றனர். தேவர்களுடைய வருத்தத்தினைக் கேட்டு சம்புவும் விஷ்ணுவும் கோபம் கொண்டனர். அப்போது கோபம் கொன்ட மும்மூர்த்திகளின் முகத்திலிருந்து மஹத்தான ஒளி ஒன்று வெளிக்கிளம்பியது. அவ்வொளி வியாபித்து எல்லா தேவசரீரங்களிலும் பரந்து நிறைந்தது.அவ்வொளி நிகரற்று மூவுலங்களிலும் தன் காந்தியால் வியாபிக்கும் ஒரு பெண் உருக்கொண்டது. சினுடைய ஒளியிலிருந்து அவள் முகம் தோன்றியது. யமனுடைய ஒளியால் கேசம் தோன்றியது. காண்க:தேவீமஹாத்மியம் ஸ்லோகம் 2:14)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

भ्रूकिंकराणि भुवनानि तव भ्रुवौ च
संध्यात्मिके इति गृणन्ति यतोऽत एव।
कर्माणि मातरितराणि करोतु मा वा
संध्यां पुनर्भजत एव समस्तलोकः।।४

*ப்ரூகிம்கராணி புவநாநி தவ ப்ருவௌ ச*
*ஸம்த்யாத்மிகே இதி க்ருணந்தி யதொ"த எவ.*
*கர்மாணி மாதரிதராணி கரோது மா வா*
*ஸந்த்யாம் புநர்பஜத எவ ஸமஸ்தலோக:..4*

அன்னையே உலகங்கள் யாவும் உன் புருவங்களின் அருள் அசைவிற்கு குற்றேவல் புரிந்து நிற்கின்றன. அவ்விரு புருவங்களோ எனில் (உதயம், அந்திப்பொழுது ஆகிய) இரு சந்தி வேளைகளேயாம் என்று சாற்றுகின்றனர்: அதனாலன்றோ உலக மாந்தர் அனைவரும் வேதங்களில் அறிவுறுத்தப்பட்ட கர்மங்கள் அனைத்தையும் செய்திடினும் செய்யாவிடினும் இவ்விதச் சந்திவேளைகளைத் தவறாது தொழுதேத்துகின்றர்.

(ஸந்தியைகளின் ஒளியால் தேவியின் இரு புருவங்-களும் உண்டாயின:.காண்க: தேவீ மாஹாத்மியம் 2:218)

जाता दृशो जननि पावकतेजसैव
तिस्रस्तवेत्यपि किमागमबोध्यमेतत्।
पापान्यपाङ्गवलनैः परिमार्जतीनां
तासां च पावकपदे विचिकित्सते कः।।५

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

*ஜாதா த்ருஷ்ணா ஜநநி பாவகதேஜஸைவ*
*திஸ்ரஸ்தவேத்யபி கிமாகமபோத்யமேதத்.*
*பாபாந்யபாங்கவலநை: பரிமார்ஜதீநாம்*
*தாஸாம் ச பாவகபதே விசிகித்ஸதே க:..5*

தாயே! உனது கண்கள் மூன்றும் அக்னியின் சுடரொளி-யிலிருந்தே தோன்றின என்பதை ஆகம நூற்களிருந்து தான் தெரிந்துகொள்ள வேண்டுமோ? அக்கண்கள் அக்னியின் இயல்பினதாகவே இருப்பதால் அன்றோ உன் கடைக்கண் அருட்பார்வை சகல பாவங்களையும் துடைத்து நீக்குகிறது. இதை யாரே ஐயுறுவர்?

(அக்னியின் ஒளியால் தேவியின் கண்கள் உண்டாயின. காண்க: தேவீ மஹாத்மியம் 2:17)

मूल्यं न यस्य भुवनानि चतुर्दशापि
मुक्ताफलं वहति तत्तव नासिकेति ।
चित्रीयते किमपि चेतसि मे न मातः
किं राजराजपदवीं भजतामलभ्यम् । ।६

*மூல்யம் ந யஸ்ய புவநாநி சதுர்தஶாபி*
*முக்தாபலம் வஹதி தத்தவ நாஸிகேதி.*
*சித்ரீயதே கிமபி சேதஸி மே ந மாத:*
*கிம் ராஜராஜபதவீம் பஜதாமலப்யம்..6*

தாயே! உலகங்கள் பதினான்கும் உன் நாசியை அலங்-கரிக்கும் ஒரு நல் முத்திற்கு ஈடாகாது. ஆயினும் இது என் மனதில் கொஞ்சமும் வியப்பினைத் தோற்றுவிக்கவே இல்லை. ஏனெனில் ரஜராஜபதவியான குபேர பதவியை அடைந்தவர்க்கு பெற இயலாதது எது?

(குபேரனுடைய ஒளியால் தேவியின் நாசி தோன்றியது. காண்க: தேவீ மஹாத்மியம் 2:16)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

नासाधिकारमिह गन्धवहात्मकत्वं
देवि श्रुती स्वयमपाहरतां भवत्याः।
सर्वाः श्रुतीरपि तु सा स्ववशे चकार
किं दुर्लभं त्रिषु जगत्सु धनेश्वराणाम्। ।७

*நாஸாதிகாரமிஹ கந்தவஹாத்மகத்வம்*
*தேவி ஶ்ருதீ ஸ்வயமபாஹரதாம் பவத்யாः.*
*ஸர்வாः ஶ்ருதீரபி து ஸா ஸ்ववஶே சகார*
*கிம் துர்லபம் த்ரிஷு ஜகத்ஸு தநேஶ்வராணாம்..7*

தேவியே! நாசியின் செயல் நறு மணங்களை நுகர்தல். (உனது குபேரனாகின்ற) நாசியோ எல்லா வேதங்களையும் தன்பால் கைக்கொண்டிருக்கின்றது. எனவே உன் காதுகள் அந்த நாசியின் செயலினைப் பறித்துக்கொள்ளட்டும்.செல்வத்திற்கு அதிபதியானோற்கு இம்மூவுலகிலும் பெற இயலாதது எது?

குபேரன் சிவனை நோக்கி கடும் தவம் புரிந்தான். சிவன் அருள் கூர்ந்து அவன் விரும்பியதற்கிசைந்து இந்திர வடிவெடுத்து கைலை வந்து உடுக்கினை எடுத்து இசைத்தார். அவ்விசையினால் கவரப்பட்டு தேவரிஷிகணங்கள், ஆகமங்கள் வேதங்கள் என யாவும் அங்கே தோன்றின. இவ்வாறு குபேரன் தவத்தால் அங்கே வேதங்கள் வந்தன. இங்கே அவன் தேவியின் நாசியாக இருப்பதனால், நாசி எல்லா சுருதிகளையும் தன் வசம் ஆக்கிக்கொன்டது. காண்கः சிவபுராணம்ः ருத்திர ஸம்ஹிதைः
சிருஷ்டி காண்டம் அத்தியாயம் 20. மேலும் தேவி மஹாத்மியம் 2:17:18 (கந்தவஹா) நறுமணத்தை தாங்கிச் செல்வது என்றும், நறு மணங்களை நுகர்தல்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நாசி என்ற பொருளிலும் வரும். சுருதிகள் காதுகள் என்றும் வேதங்கள் என்ற பொருளிலும் கவிநயத்தோடு வருதல் காண்க.

प्राञ्चो जगज्जनिं ये पतयः प्रजानां
ते देवि संववृतिरे दशनात्मना ते।
नो चेत्तदन्तिकतले रसनाग्रभागे
किं भारती वसति किंकरतां गतेव।।८

ப்ராஞ்சோ ஜகஜ்ஜநிம் யே பதயஹ ப்ரஜாநாம்
தே தேவி ஸம்வவ்ருதிரே தஶநாத்மநா தே.
நோ சேத்ததந்திகதலே ரஸநாக்ரபாகே
கிம் பாரதீ வஸதி கிம்கரதாம் கதேவ..8

ஜகன்மாதாவே ! தொன்மை மிக்க மரபினைச்சார்ந்த ப்ரஜாபதிகள் உன் பல்வரிசைகளாகத் தோன்றினார்கள். இல்லாவிடில் ஸரஸ்வதி தேவியானவள் அருகில் இருக்கின்ற நாக்கின் நுனியில் எதன் பொருட்டு ஒரு பணியாளாகத் தங்கி இருக்கின்றாள் ?

பிரஜாபதிகளின் ஒளியால் தேவியின் பல்வரிசைகள் உண்டாயின. காண்க: தேவீ மஹாத்மியம் 2:17

स्वेनात्मना मुररिपुर्दनुजैर्विगृह्य
वारान् कतीह न बभार पराङ्मुखत्वम्।
ओजायितुं स निरपायमुपायवेदी
बाह्वात्मना परिणतो नियतं भवत्याः।।९

ஸ்வேநாத்மநா முரரிபுர்தநுஜைர்விக்ருஹ்ய
வாராந் கதீஹ ந பபார பராங்முகத்வம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

*ஒஜாயிதும் ஸ நிரபாயமுபாயவேதீ*
*பாஹ்வாத்மநா பரிணதோ நியதம் பவத்யா:..9*

விஷ்ணுபிரான் அசுரர்களோடு தனியாகவே போரிட்டு எத்தனை தடவைகள் திரும்பி வந்திருக்கின்றார்! ஆயினும் தாயே, போர் தந்திரரான அவர் வல்லமை பெறுவதற்கும் தீங்கற்று இருப்பதற்கும் நிச்சயமாக உன் திருக்கரங்களாகவே அமர்ந்திருக்கின்றார்

விஷ்ணுவின் ஒளியால் தேவியின் புஜங்கள் தோன்றின காண்க: தேவீ மஹாத்மியம் 2:14

वर्षन् करो महिषमर्दनि ते वसूनि
प्रस्तूयतां कविजनैर्न ममाद्भुतं तत्।
आसादिता वसुभिरङ्गुलिता यदीया
कस्तस्य शंस वसुवर्षविधौ प्रयासः। ।१०

*வர்ஷந் கரோ மஹிஷமர்தநி தே வஸூநி*
*ப்ரஸ்தூயதாம் கவிஜநைர்ந மமாத்புதம் தத்.*
*ஆஸாதிதா வஸுபிரங்குலிதா யதீயா*
*கஸ்தஸ்ய ஶம்ஸ வஸுவர்ஷவிதௌ ப்ரயாஸ:..10*

மஹிஷமர்தினியே! செல்வத்தை அள்ளி அளிக்கும் உன் கைகளைப் போற்றிப் புகழ்வது எனக்கொன்றும் வியப்பாகத் தோன்றவில்லை. (ஏனெனில்) வஸுக்கள் செல்வத்தைப் பொழியும் உன் திருக்கை விரல்களாகத் தோன்றி இருக்கும்போது இதில் என்ன அதிசயம்? நீயே சொல்லி அருள்வாய்.

வஸுக்களின் ஒளியால் தேவியின் கை விரல்கள் உண்டாயின. காண்க: தேவீ மஹாத்மியம் 2:16,.(வஸு,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அஷ்டவஸுக்கள், செல்வம் ஆகிய இரு பொருள்களில் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றது.)

सोमेऽमृतं कतिचिदेव पुरा लभन्ते
तल्लभ्यमस्तु जगतामिति तर्कयन्त्या।
नीतः पयोधरदशां स शिवे त्वया य-
दस्मादृशामयमतर्कितभाग्ययोगः। ।११

*ஸோமே"ம்ருதம் கதிசிதேவ புரா லபந்தே*
*தல்லப்யமஸ்து ஜகதாமிதி தர்கயந்த்யா.*
*நீதஹ பயோதரதஶாம் ஸ ஶிவே த்வயா ய-*
*தஸ்மாத்ருஶாமயமதர்கிதபாக்யயோக:..11*

துவக்ககாலத்தில் ஒரு சிலர் மட்டுமே சந்திரனிலிருந்து அமுதத்தை பெற்று வந்தனர். சிவரூபிணியே! அந்த அமுதமானது உலகம் முழுவதற்கும் கிடைக்கட்டும் என்று நீ அருளியதால் அச்சந்திரன் உன் மார்பகங்களாக அமைந்தது. இது எங்களைப் போன்றோர்க்கு எதிர்-நோக்கியிராத பெரும் பாக்கியம் அன்றோ.
சந்திரனுடைய காந்தியால் தேவியின் மார்பகங்கள் தோன்றின. காண்க: தேவீ மஹாத்மியம் 2:15

ब्रह्मर्षिशापभवया त्रपया महत्या
प्रागास्त यः क्वचन देवि सरस्यदृश्यः।
नूनं स एष विबुधाधिपतिर्भवत्याः
प्राप्तो वलग्नपदवीमधुनाप्यदृश्यः। ।१२

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ப்ரஹ்மர்ஷிஶாபபவயா த்ரபயா மஹத்யா
ப்ராகாஸ்த யஹ க்வசந தேவி ஸரஸ்யத்ருஶ்யஹ.
நூநம் ஸ ஏஷ விபுதாதிபதிர்பவத்யா:
ப்ராப்தோ வலக்நபதவீமதுநாப்யத்ருஶ்ய:..12

தேவியே! இந்திரன் முன்பொருநாள் பிரம்ம ரிஷி கௌதமனின் சாபமேற்று வெட்கத்தின் காரணமாய் எங்கேயோ ஒரு குளத்தினுள் மறைந்து கண்ணுக்கு புலனாகாது நின்றான். தேவ அதிபதியான அவ்விந்திரன், சற்றும் ஐயமின்றி உன் மெல்லிடையாக அமர்ந்த காரணத்தால் இப்போதும் கண்ணுக்கு புலனாகாது மறைந்து நிற்கின்றான்.

இந்திரனுடைய காந்தியால் தேவியின் இடை தோன்றிற்று
காண்க: தேவீ மஹாத்மியம் 2:15

पादौ बभूव तव पद्मभवस्ततः किं
बाह्वात्मना परिणाम हरिस्ततः किम्।
सिद्धा नितम्बविधया वसुधा यदा ते
सिद्धस्तदा पुरहरस्य मनोरथोऽयम्। ।१३

பாதௌ பபூவ தவ பத்மபவஸ்ததஹ கிம்
பாஹ்வாத்மநா பரிணநாம ஹரிஸ்ததஹ கிம்.
ஸித்தா நிதம்பவிதயா வஸுதா யதா தே
ஸித்தஸ்ததா புரஹரஸ்ய மநோரதோ"யம்..13

பிரம்மா உனது இரு பாதங்களாக அமைந்ததனால் என்ன? விஷ்ணு உனது கைகளாக அமைந்ததனால் என்ன? (ஒன்றும் இல்லை அல்லவா? ஆனால்) பூமி தேவி எப்போது உனது பிரஷ்டபாகமாக அமைந்தனளோ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அப்போதே திரிபுரம் எரித்த சிவனாரின் மனோரதம் நிறைவேறிற்றன்றோ!

பூமியின் காந்தியால் தேவியின் பிரஷ்ட பாகங்கள் தோன்றின. காண்க: தேவீ மஹாத்மியம் 2:15

यद्वारुणं कथितमूरुयुगं सजङ्घ-
मिन्दीवरच्छदसकान्ति न वारुणं तत्।
प्राचेतसं तदिह वर्णयितुं क्षमेत
प्राचेतसं कविकुलप्रथमं विना कः। ।१४

*யத்வாருணம் கதிதமூருயுகம் ஸஜங்க-*
*மிந்தீவரச்சதஸகாந்தி ந வாருணம் தத்.*
*ப்ராசேதஸம் ததிஹ வர்ணயிதும் க்ஷமேத*
*ப்ராசேதஸம் கவிகுலப்ரதமம் விநா கः...14*

உன் இரு துடைகளும் முழங்கால்களும் வருண தேஜஸால் அமையப் பெற்றன; எனினும் நின் ஒளி, சிவப்பு நிறமின்றி நீலோத்பல நிறத்தினையன்றோ உடையது. (பிரசேதஸான) வருணனிடமிருந்து பெற்ற தேஜஸை வர்ணிப்பதற்கு கவிதல நாயகன் வால்மீகி அன்றி வேறு யாருக்கு இயலும்?

வருணனுடைய ஒளியால் தேவியின் துடைகளும் முழங்கால்களும் தோன்றின. (காண்க: தேவீ மஹாத்மியம் 2:15:). வருணனின் ஒளியிலிருந்து பெறப் பெற்றும் 'வ + அருணம்', 'சிவப்பு நிறம்' தோன்றவில்லை. வருணன், வர்ணம் வர்ணனை ஆகிய சொற்களின் கவிநயம் காண்க

वक्त्रैरकृत्रिमवचांसि वहन् विषण्णो
वेधाश्चिरं विपरिणम्य पदात्मना ते।

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

संधार्यतेऽद्य शिरसा सकलैरमीभिः
क्लिष्टश्चिरात् किमुपयातु न जातु हर्षम्। ।१५

வக்த்ரைரக்ருத்ரிமவசாம்ஸி வஹந் விஷண்ணோ
வேதாஶ்சிரம் விபரிணம்ய பதாத்மநா தே.
ஸம்தார்யதே"த்ய ஶிரஸா ஸகலைரமீபி:
க்லிஷ்டஶ்சிராத் கிமுபயாது ந ஜாது ஹர்ஷம்..15

பிரம்மா வெகுநாட்களாகத் தன் வாயினால் வேதவாக்குகளைச் சோர்வுடன் தாங்கிவந்தார். இப்போது அவர் உன் பாதங்களாக மாற வேதங்கள் யாவும் அவரைத் தலையால் தாங்குகின்றன. வெகு நாட்களாகத் துன்பம் நுகர்வோர் எப்போதேனும் ஒரு பொழுது சுகத்தை அடைவதில்லையா?

பிரம்மாவின் ஒளியால் தேவியின் இரு பாதங்கள் தோன்றின.காண்க:தேவீமஹாத்மியம்2:16: வேதசிரஸான உபநிஷத்துக்கள் தேவியின் பாதங்களைத் தாங்கு-கின்றன.

बाह्यं तमो हरति यस्तपनः कथंचि-
त्पादौ तवाङ्गुलितयाम्ब भजन् स एव।
अन्तस्तमांसि च हरत्यतिदुर्हराणि
किं सेव्यसेवनविधिर्न करोति पुंसाम्। ।१६

பாஹ்யம் தமோ ஹரதி யஸ்தபநஹ கதம்சி-
த்பாதௌ தவாங்குலிதயாம்ப பஜந் ஸ எவ.
அந்தஸ்தமாம்ஸி ச ஹரத்யதிதுர்ஹராணி
கிம் ஸேவ்யஸேவநவிதிர்ந கரோதி பும்ஸாம்..16

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தேவியே! சூரியனானவன் பெரு முயற்சியுடன் எதோ ஒரு வழியில் புற இருளை மாய்த்து (எங்கும்) ஒளி படரச் செய்கிறான்: அவனே உன் கால் விரல்களாக அமைந்து உன்னை வாழ்த்தி, நீக்குதற்கரிய அகஇருளையும் நீக்குகிறன். வாழ்த்தி வணங்குதற்குரியோரை வணங்கும் மனிதர்கட்கு இறைவன் செய்யாதது எது?

சூரிய ஒளியால் தேவியின் கால் விரல்கள் தோன்றின
காண்க: தேவீ மஹாத்மியம் 2:16

देवेषु वासवमुखेषु निजां निधाय
शक्तिं यदम्ब समये पुनरग्रहीस्त्वम्।
कर्पूरभाजननयादधुनापि ते ते
कीर्तिं वहन्ति कियतीमपि तावतैव। ।१७

தேவேஷு வாஸவமுகேஷு நிஜாம் நிதாய
ஶக்திம் யதம்ப ஸமயே புநரக்ரஹீஸ்த்வம்.
கர்பூபாஜநநயாததுநாபி தே தே
கீர்திம் வஹந்தி கியதீமபி தாவதைவ..17

தேவியே! முன்பொருநாள் நீ உனது சக்தியினை இந்திராதி தேவர்களிடம் அருட்கொடையாக அளித்திருந்தாய். எனினும் பிறிதொரு சமயம் நீயே அதனை எடுத்துக்கொண்டாய். இவ்வாறு கொடுத்து எடுத்துக் கொண்டதாலேயே, அவர்கள் கற்பூரம் வைத்திருந்த பெட்டி, கற்பூரத்தை எடுத்த பின்னும் மணம் வீசுதல் போல இப்போதும் உன் சக்தியின் மகிமையை தாங்கி நிற்கின்றனர்.

तेजांसि च प्रहरणानि च यानि यानि
देवेषु देवि निहितानि पुरा भवत्या।

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

तान्येव निष्फलतराणि तदाश्रितानि
त्वत्स्वीकृतानि फलवन्ति बभूवुरित्थम्। ।१८

தேஜாம்ஸி ச ப்ரஹரணாநி ச யாநி யாநி
தேவேஷு தேவி நிஹிதாநி புரா பவத்யா.
தாந்யேவ நிஷ்பலதராணி ததாஸுரிதாநி
த்வத்ஸ்வீக்ருதாநி பலவந்தி பபூவுரித்தம்..18

தேவியே! முன்பொருநாள் தேவர்கள் ஒவ்வொருவர்க்கும் வலிமையும் ஆயுதங்களும் உன்னால் அருளி வழங்கப்பட்டன.எனினும் அவை யாவும் அவர்களிட-மிருந்தபோது அசுரர்களைஅழிக்க இயலாமல் பயனற்று இருந்தன. ஆனால் அவை (மகிஷாஸுரனை அழிக்கும் பொருட்டு) உன்னால் திரும்பப் பெறப் பெற்றபோது பயனுடையவாய் மாறின.
(காண்க தேவீ மஹாத்மியம் 2 20-31)

शक्त्या यया दिविचरा अतिशेरतेऽस्मान्
सा च त्वमित्यवगतः सकलैश्च तन्त्रैः।
किं त्वं विचारकुशलैरसि सेवनीया
किं देवतास्तव ऋजीषदशां प्रपन्नाः। ।१९

ஶக்த்யா யயா திவிசரா அதிஶேரதே"ஸ்மாந்
ஸா ச த்வமித்யவகதஹ ஸகலைஶ்ச தந்த்ரை:..
கிம் த்வம் விசாரகுஶலைரஸி ஸேவநீயா
கிம் தேவதாஸ்தவ ருஜீஷதஶாம் ப்ரபந்நா:...19

மனிதர்களகிய எங்களிலிருந்து தேவர்களையும் உயர்ந்தோராக்கும் சக்தி எதுவோ அதுவும் நீயே! இதனை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மறை நூற்களும் தெரியப்படுத்துகின்றன. நுண்ணிய சிந்தை மிக்கோரால் வாழ்த்தப்பட வேண்டியவள் நீயா அல்லது ரஸமெடுக்கப்பட்ட ஸொமலதைகள் போலி-ருக்கும் அவர்களா?

इन्द्रं यजन्तु तव गर्भमुपासते ते
वह्निं यजन्तु नयने तव तर्पयन्ति।
भानुं नमन्तु विनमन्ति पदाम्बुजं ते
सर्वं जगन्ननु समर्चति सर्वथा त्वाम्। ।२०

இந்த்ரம் யஜந்து தவ கர்பமுபாஸதே தே
வஹ்நிம் யஜந்து நயநே தவ தர்பயந்தி.
பாநும் நமந்து விநமந்தி பதாம்புஜம் தே
ஸர்வம் ஜகந்நநு ஸமர்சதி ஸர்வதா த்வாம்..20

உலக மக்கள் இந்திரனுக்கு வேள்வி செய்யுமிடத்து (உண்மையில்) உன் உதரத்தை வழி படுகின்றனர். அவர்கள் அக்னிக்கு வேள்வி செய்யுமிடத்து உன் கண்களுக்கு மகிழ்வூட்டுகின்றனர். அவர்கள் சூரியனுக்கு வணக்கம் செய்யுமிடத்து உன் பாதகமலங்களை வணங்குகின்றனர். (எனவே) உலகமுழுவதும் எல்லா வழிகளிலும் உன்னையே தான் வழிபடுகிறது.
அக்னி, இந்திரன், சூரிய்ன் ஆகியோர் முறையே தேவியின் இடை, கண்கள், கால்விரல்களாகதோன்றினர்.
காண்க: தேவி மஹாத்மியம் 2-:15,17,16.

केचित् प्रतीकमितरे तु समग्ररूप-
माराधयन्ति तव ये पुनरास्तिकाः स्युः।
नास्तिक्यवादनिरता नरके पतन्तो-
ऽप्यम्ब स्तुवन्ति चिकुरात्मकमन्तकेन। ।२१

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கேசித் ப்ரதீகமிதரே து ஸமக்ரரூப–
மாராதயந்தி தவ யே புநராஸ்திகா: ஸ்யு:.
நாஸ்திக்யவாதநிரதா நரகே பதந்தோ–
"ப்யம்ப ஸ்துவந்தி சிகுராத்மகமந்தகேந..21

ஆஸ்திகர்களில் சிலர் உனது உருவத்தினை வழிபடு–கின்றனர். மற்றும் சிலர் உனது நேர் வடிவத்தினை வழிபடுகின்றனர்.தேவியே! நரகத்தில் வீழ்ந்த நாஸ்திகர்கள்–கூட உனது கூந்தலாய் அமைந்திருக்கும் யமனை வழி–படுகின்றனர்.

யமன் தேவியின் கூந்தலாகத் தோன்றினான்
காண்க: தேவி மஹாத்மியம் 2–:14.

शौरिं विबोध्य समराय तमुद्यमय्य
व्यामोह्य दानववरौ कृतसंविधाना।
मातस्त्वमेव मधुकैटभयोर्निहन्त्री
शार्ङ्गी कृते भवति शस्त्रपदाभिषिक्तः।।२२

ஶௌரிம் விபோத்ய ஸமராய தமுத்யமய்ய
வ்யாமோஹ்ய தாநவவரௌ க்ருதஸம்விதாநா.
மாதஸ்த்வமேவ மதுகைடபயோர்நிஹந்த்ரீ
ஶார்ங்கீ க்ருதே பவதி ஶஸ்த்ரபதாபிஷிக்த:..22

மஹாவிஷ்ணுவை உணர்த்தி எழுப்பி, போர்செய்யும் பொருட்டு முனைப்படுத்தி அந்த இரு மஹாஸுரர்–களையும் மோஹமடையச் செய்து எல்லாவற்றையும் நெறிப்படுத்தியது நீயே தான் அன்னையே! மது–கைடபர்களை அழித்தவள் நீயே! எல்லவற்றையும் நீயே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தான் செய்தாய். (எனினும்) சார்ங்கம் என்னும் படைக்கலத்தால் (அவர்) விஷ்ணு போற்றப்படுகிறார். காண்க: தேவி மஹாத்மியம் 1:67-93

दैत्यौ वरं वितरतो निजनाशरूपं
दैत्यारये त्रिजगतां वरदो वरार्थीं ।
इत्थं प्रचोदितधियां क्षममीश्वरत्वं
वृत्तेषु किं न सचिवोऽपि नृपं नियुङ्क्ते ।।२३

*தைத்யௌ வரம் விதரதோ நிஜநாஶரூபம்*
*தைத்யாரயே த்ரிஜகதாம் வரதோ வரார்தீ .*
*இத்தம் ப்ரசோதிததியாம் க்ஷமமீஶ்வரத்வம்*
*வ்ருத்தேஷு கிம் ந ஸசிவோ"பி நிருபம் நியுங்க்தே .*

அசுரர்களின் எதிரியும் மூவுலகங்களுக்கும் வரம் அளிப்பவருமான விஷ்ணுவிற்கு இரு அசுரர்கள் தங்களையே மாய்க்கும் வரத்தை அளித்தார்கள். (தேவியின் அருளால்) தூண்டப்பட்ட புத்திசக்தி உடையோருக்குத்தான் சர்வவல்லமையும் உரித்தாகும். மதிநுட்பமுடைய மந்திரி மன்னனை வழிநடத்திச் செல்வதில்லையா? (அதைப்போல அவ்வசுரர்களிடம் இருந்து அவ்வாறு வரம் பெறும் புத்திசக்தியை தேவியே விஷ்ணுவிற்களித்தாள்) .
அவ்வித அசுரர்கள் தங்களையே மாய்க்க செய்யும் வரத்தை அசுரர்களின் பகைவர் விஷ்ணுவிற்கு கொடுத்தார்கள். வரத்தை கேட்டவர் மூவுலகங்களுக்கும் வரம் அளிப்பவரான விஷ்ணு. காண்க: தேவி மஹாத்மியம் 1-:94-103.

न्यस्तं यदा शिरसि पादतलं भवत्या
लब्धं तदैव महिषेण परं पदं ते।

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

हन्तुं पुनर्यदिदमाददिषे त्रिशूलं
तत्ते जगज्जननि सङ्गरसंभ्रमेण । ।२४

*ந்யஸ்தம் யதா ஶிரஸி பாததலம் பவத்யா*
*லப்தம் ததைவ மஹிஷேண பரம் பதம் தே.*
*ஹந்தும் புநர்யதிதமாததிஷே த்ரிஶூலம்*
*தத்தே ஜகஜ்ஜநநி ஸங்கரஸம்ப்ரமேண..24*

ஜகன் மாதாவே! எக்கணம் உன் திருவடி மஹிஷாஸுரனின் தலைமீது வைக்கப்பட்டதோ அப்போதே நீ அளிக்கும் பரம பதத்தினை அவன் பெற்றுவிட்டான். எனினும் நீ அவனை மீண்டும் அழிப்பது போலே திரிசூலத்தை எடுத்த காரணம் என்னவெனில் போரினின்றும் பெறும் வெறும் மனக்கிளர்ச்சியே தான்.

காண்க தேவீ மஹாத்மியம் 2:40-42

कस्त्वां रणे जयतु कस्तव हन्तु दर्पं
को वास्तु ते प्रतिभटो भविता पतिः कः ।
दैत्यं प्रतारयितुमेव कृतोऽभ्युपायो
देवं न विस्मृतवती भवती महेशम् । ।२५

*கஸ்த்வாம் ரணே ஜயது கஸ்தவ ஹந்து தர்பம்*
*கோ வாஸ்து தே ப்ரதிபடோ பவிதா பதி: க:.*
*தைத்யம் ப்ரதாரயிதுமேவ க்ருதோ"ப்யுபாயோ*
*தேவம் ந விஸ்ம்ருதவதீ பவதீ மஹேஶம்..25*

யாரால் உன்னை போரில் வெல்லமுடியும்? உன் பெருமைக்கு இழுக்கு விளைவிக்க முடியும்? யாரால் உனக்கு எதிரியாக தோன்ற முடியும்? நீ இவ்வுபாயத்தை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

போரில் மேற்கொண்டது இவ்வசுரனை ஏமாற்றுவதற்கே அன்றி மகேசனை மறந்தல்ல.

சும்பன், நிசும்பன் ஆகிய அசுரர்களை அழிப்பதற்கு தேவீ கௌசுகி என்ற பெயரோடு அதிமோஹன வடிவத்தை எடுத்தாள். அவ்வழகில் மயங்கிய சும்பன், தேவியிடம் தன்னையோ தன் சகோதரனையோ மணக்குமாறு கேட்டு, சண்டன், முண்டன் எனும் இருவரை தூது அனுப்பினான். அதற்கு தேவியானவள் தன்னை போரில் யார் வெற்றி பெறுவாரோ அவரையே மணப்பதென்று சபதம் செய்திருப்பதாக தெரிவித்தாள். இதனால் அவ்விரு அசுரரும் சண்டன் முண்டன் மற்றும் பலரும் சண்டையிட்டு மாண்டனர்.
காண்க: தேவி மஹாத்மியம் 5:89-129

चण्डि द्विषस्तव निपेतुरपेतकृत्या-
श्चण्डाट्टहासनिनदैरिति नाद्भुतं नः।
दृष्टक्रियास्त्रिषु पुरेषु तवाप्रसिद्धो
मन्दस्मितार्धमहिमा न हि मादृशानाम्। ।२६

*சண்டி த்விஷஸ்தவ நிபேதுரபேதக்ருத்யா-*
*ஶ்சண்டாட்டஹாஸநிநதைரிதி நாத்புதம் நः.*
*த்ருஷ்டக்ரியஸ்த்ரிஷு புரேஷு தவாப்ரஸித்தோ*
*மந்தஸ்மிதார்தமஹிமா ந ஹி மாத்ருஶாநாம்..26*

சண்டிதேவியே! உனதுஎதிரிகள் உன் மட்டற்ற களியாட்டத்தின் முழக்கத்தினால் செய்வகையறியாது வீழ்ந்தனர் என்பது எங்களுக்கு வியப்பை அளிக்கவில்லை. உனது குறுநகையின் பகுதியளவினாலேயே முப்புரங்களும் அழிந்தபோது உன் மகிமை தோன்றிற்று. அது என் போன்றவர்க்கு தெரியாததல்ல.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அசுரர்கள் அசைக்க முடியாத மூன்று கோட்டைகளினுள் பாதுகாப்பாக இருந்தனர்: காரணம் அவர்களது சிவபக்தியாலே தான். தேவி மிக வசீகரமான ஒரு தோற்றமெடுத்தபோது அவ்வசுரர்கள் தேவியின் அழகுச் சிரிப்பில் மயங்கி சிவனை மறந்தனர்.. அதனால் அவர்கள் தங்கள் பாதுகப்பையும் இழந்தனர். சிவனுக்கு அவர்களின் கோட்டையைத் தகர்ப்பது எளிதாயிற்று.

कर्माणि यानि दश ते जनभीषणानि
कल्याणदानि भजतामभिजानतां वा।
तैरेव विश्वमखिलं परिवृत्तिभेदै-
र्बध्नासि मुञ्चसि च कुञ्चिकयेव यन्त्रम्। ।२७

*கர்மாணி யாநி தஶ தே ஜநபீஷணாநி*
*கல்யாணதாநி பஜதாமபிஜாநதாம் வா.*
*தைரேவ விஶ்வமகிலம் பரிவ்ருத்திபேதை-*
*ர்பத்நாஸி முஞ்சஸி ச குஞ்சிகயேவ யந்த்ரம்..27*

உனது பத்துவகைச் செயல்களும் (அசுர) ஜனங்களை அச்சுறுத்துவனவாய் அமைகின்றன: உன்னை அறிந்த-வர்களுக்கும் துதிப்பவர்களுக்கும் நல்லுணர்வினை அள்ளி அருளுகின்றன. அந்த அவதாரங்களின் பல்வேறு தோற்றங்களினால் உனது அருளானது அகிலமுழுவதையும் உய்விக்கவும் செய்கின்றது. ஒரு சாவி பூட்டினை இணைக்கவும் திறக்கவும் செய்வதைப் போல.

अन्वासितं हरिहरद्रुहिणैः सदारै-
र्जामातृभिस्तनुभवैर्दुहितुः सुतैश्च।
अग्रोपवेशितजगज्जननीसमाज-
माराधये जननि रूपमनुत्तरं ते। ।२८

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அந்வாஸிதம் ஹரிஹரத்ருஹிணை: ஸதாரை-
ர்ஜாமாத்ருபிஸ்தநுபவைர்துஹிது: ஸுதைஶ்ச.
அக்ரோபவேஶிதஜகஜ்ஜநநீஸமாஜ-
மாராதயே ஜநநி ரூபமநுத்தரம் தே..28

பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரும் அவர் மனைவியரும், அவர்களுடைய ஆண்-பெண் குழந்தைகளும் மேலும் அவர்தம் குழந்தைகளும் எல்லோருமாக ஜகன்மாதாவாகிய உன் முன்னால் அமர்ந்திருக்கும் அத்திருப்பேரவையில் உனக்கப்பாற்பட்டு உன்னைக் கடந்து ஒருவருமில்லா உன் திருவுருவத்தை, தாயே நான் வழிபடுகிறேன்.

सर्वानुकम्पनपरं स्वकृतोपदेशैः
सार्वज्ञगर्वशमनं तरुणेन्दुमौलेः।
सत्त्वैकसारमकृतोक्तिपथानुसारं
सारस्वतं वपुरिदं तव चिन्तयामः।।२९

ஸர்வாநுகம்பநபரம் ஸ்வக்ருதோபதேஶை:
ஸார்வஜ்ஞகர்வஶமநம் தருணேந்துமௌலே:.
ஸத்த்வைகஸாரமக்ருதோக்திபதாநுஸாரம்
ஸாரஸ்வதம் வபுரிதம் தவ சிந்தயாம:..29

எல்லோர்பாலும் கருணை கொன்டிருப்பவளும், தன்னால் செய்யப்பட்ட உபதேசங்களினால் பிறைச்சந்திரனை சூடிய சிவபிரானின் தானே எல்லாம் அறிந்தவன் என்ற அகம்பாவத்தை நீக்கியதும், சுத்த ஸத்வகுணமானதும், வேதத்தினை ஒற்றிச் செல்வதும் வாக்குப் பரம்பொருளாகவே இருப்பதுமான உனது இவ்வடிவத்தினை நாங்கள் தியானிக்கிறோம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

नन्दात्मजेति ननु वर्षसि हेमराशिं
शाकम्भरीति शमयस्युदरोपसर्गान्।
योगीश्वरीति परिहृत्य भयानि भक्तान्
मातेव पाययसि कामदुघौ स्तनौ ते। ।३०

நந்தாத்மஜேதி நநு வர்ஷஸி ஹேமராஶிம்
ஶாகம்பரீதி ஶமயஸ்யுதரோபஸர்காந்.
யோகீஶ்வரீதி பரிஹ்ருத்ய பயாநி பக்தாந்
மாதேவ பாயயஸி காமதுகௌ ஸ்தநௌ தே..30

நந்தனுடைய பெண்ணாகத் தோன்றி (பக்தர்களுக்கு) தங்கக் குவியல்களாகப் பொழியச் செய்கின்றாய் அன்றோ? சாகம்பரியாகத் தோன்றி வயிற்றின் துன்பங்களை நீக்குகின்றாய். யோகீஸ்வரியாகத் தோன்றி பக்தர்களின் பயத்தை போக்குகின்றாய். ஒரு தாய் போல் பக்தர்கள் விரும்பியதைத்தரும் தனங்களால் அருட்-பாலைச் சுரந்து அருந்த வைக்கின்றாய்.

इच्छात्मिका पुरहरस्य चिदात्मिका च
शक्तिस्त्रिलोकविदिते न हि तत्र शङ्का।
ते चार्चिते जनयतः किल यत्प्रसादं
तामाश्रये भगवतः कृतिशक्तिमाम्बाम्। ।३१

இச்சாத்மிகா புரஹரஸ்ய சிதாத்மிகா ச
ஶக்திஸ்த்ரிலொகவிதிதே ந ஹி தத்ர ஶங்கா.
தே சார்சிதே ஜநயதஹ கில யத்ப்ரஸாதம்
தாமாஶ்ரயே பகவத: க்ருதிஶக்திமாம்பாம்..31

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மூவுலகிலும் நன்கு அறியப்பட்ட தாயே! சிவபிரானது இச்சாசக்தி, ஞானசக்தி இவ்விரண்டும் நீயே என்பதில் சற்றும் ஐயமில்லை. இவ்விரு சக்திகளும் தொழுது ஏற்றி எந்த சக்தியை அருட்பேறாகப் பெறுகின்றதோ அந்தக் கிரியா சக்தியேயாகி இருக்கின்ற அன்னையே! உன்னை நான் தஞ்சம் அடைகிறேன்.

(கிரியா சக்தியும் சிவனுடையதே.)

त्वं चेतनासि हृदयं त्वमसि प्रजानां
त्वं वृत्तयो धृतिमतिप्रमुखास्तदीयाः।
कैः साधनैरभिमुखीकरणं तव स्यात्
स्वेनैव देवि दयसे यदि तद्दयेथाः।।३२

*த்வம் சேதநாஸி ஹ்ருதயம் த்வமஸி ப்ரஜாநாம்*
*த்வம் வ்ருத்தயோ த்ருதிமதிப்ரமுகாஸ்ததீயாः.*
*கைः ஸாதநைரபிமுகீகரணம் தவ ஸ்யாத்*
*ஸ்வேநைவ தேவி தயஸே யதி தத்தயேதாः...32*

தாயே! நீயே எல்லா உயிரினங்களுடையவும் உணர்ச்சிப் பொருளாகின்றாய்; அவைகளின் இதயமும் ஆகின்றாய்; ஆதாரஜீவனும், எண்ணங்களும் மற்றுமெல்லாம் நீயே! நீயாகவே என்மீது தயைகூர்ந்து அருள் பாலிக்காவிடில் நான் எவ்வாறு உன் அருட்ப்பார்வையை என் மீது திருப்ப முடியும்?

त्वत्पूजनं यदिह जानदजानदर्हं
मातश्चकर्थ महती किल चातुरीयम्।

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

जानद्भिरेव भवती यदि पूजनीया
लुप्येत पूजनकथैव जगत्त्रये ते । ।३३

த்வத்பூஜநம் யதிஹ ஜாநதஜாநதர்ஹம்
மாதஶ்சகர்த மஹதீ கில சாதுரீயம்.
ஜாநத்பிரேவ பவதீ யதி பூஜநீயா
லுப்யேத பூஜநகதைவ ஜகத்ரயே தே. 33

அன்னையே! கற்றறிந்தோர், அறிவற்றோர் ஆகிய எல்லோரும் இங்கு உன்னை வழிபடுவதற்கு நீ வகை செய்து விட்டாய்; இது மிகப்பெரிய தந்திரம் அன்றோ! கற்றறிந்தோர் மட்டுமே உன்னை வழிபட இயலும் என்றிருந்தால் மூவுலகிலும் உன்னை வழிபடுதல் என்ற பேச்சிற்கே இடமில்லாது போயிருக்கும்

यावत्परत्वमखिलागमबोधितं ते
तावत्ततः शतगुणं च सुखाश्रयासि ।
वेदास्त्वदर्चनविधानपरा हि नो चे-
दम्ब स्युरब्धितरणोक्तिवदप्रमाणम् । ।३४

யாவத்பரத்வமகிலாகமபோதிதம் தே
தாவத்ததஹ ஶதகுணம் ச ஸுகாஶ்ரயாஸி.
வேதாஸ்த்வதர்சநவிதாநபரா ஹி நோ சே-
தம்ப ஸ்யுரப்திதரணோக்திவதப்ரமாணம்..34

உனது பெருமை வேத நூற்கள் எல்லாவற்றிலும் எவ்வளவு சொல்லப்பட்டிருக்கின்றதோ அதைவிடவும் நூறு மடங்கு உயர்ந்தது. நீயே பேரின்பத்தின் உறைவிடம். தாயே! உன்னை வழிபடும் முறையினை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தெளிவாக சிரத்தையோடு விளக்காவிடில் அது எதோ கடலைத் தாண்டுதல் என்பது போல சான்றுஉறுதி இல்லாத கூற்றாகிவிடும்.

प्राज्ञानभिज्ञसुलभां परिपूर्णशक्ति-
मव्याजभूतकरुणापरिणामरूपाम् ।
अम्बां मनागपि मनस्यवलम्बमाना
धीरा न बिभ्यति कथंचिदितोऽमुतो वा । ।३५

*ப்ராஜ்ஞாநபிஜ்ஞஸுலபாம் பரிபூர்ணஶக்தி-*
*மவ்யாஜபூதகருணாபரிணாமரூபாம்.*
*அம்பாம் மநாகபி மநஸ்யவலம்பமாநா*
*தீரா ந பிப்யதி கதம்சிதிதோ"முதோ வா..35*

கற்று அறிந்தவர்களாலும் அறியாதவர்களாலும் எளிதில் அடையத்தக்கதான, பரிபூரண சக்தியான தூய கருணையே வடிவான தேவியே! மனதில் வேறு ஆசைகள் எதுவுமின்றி உன்னை ஒரு சிறிதேனும் நினைவில் நிறுத்தித் துதிப்போர்க்கு இவ்வுலகிலும் மற்றெவ்-வுலகிலும் ஒரு பயமும் இல்லை.

अभ्यर्थनीयमखिलं भवदाश्रिताना-
मभ्यर्थितं प्रथममेव हि देवसंघैः ।
अम्ब स्मरन्सफलयाम्यवशिष्टमायु-
रङ्गानि ते भुवनमङ्गलमङ्गलानि । ।३६

*அப்யர்தநீயமகிலம் பவதாஶ்ரிதாநா-*
*மப்யர்திதம் ப்ரதமமேவ ஹி தேவஸம்கை:.*
*அம்ப ஸ்மரந்ஸபலயாம்யவஶிஷ்டமாயு-*
*ரங்காநி தே புவநமங்கலமங்கலாநி..36*

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தாயே! உன்னைத் தஞ்சமாகப் புகுந்து உன்னிடம் வணங்கிப்பெற வேணிடியவை யாவும் ஏற்கனவே தேவர்கள் திருக்கூட்டத்தினரால் வேண்டிக்கொள்ளப் பட்டு விட்டன. எனவே, இவ்வுலகில் மங்களமாய் திகழும் எல்லாற்றிற்கும் மங்களித்தினை அளிக்கும் உன் அங்கங்களை தியானித்துக் கொண்டு எனது எஞ்சி-யிருக்கின்ற நாட்கள் எல்லாம் பயனுடையதாக ஆக்கிக்-கொள்வேன்.

காண்க தேவி மாஹாத்மியம் 4:1-37

## ।इति श्रीनीलकण्ठदीक्षितविरचितं चण्डीरहस्यं संपूर्णम्।।

ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் அருளிய சண்டி ரஹஸ்யம் முற்றும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

## ।। श्रीमङ्गळनयिकास्तोत्रम् ।।

ताम्रपर्णिमध्यगां दिव्यहर्म्यवासिनीम् ।
तप्ततापहारिणीं नौमि मङ्गळेश्वरीम् ।।१।।

தாம்ரபர்ணி மத்யகாம் திவ்யஹர்ம்யவாஸினீம்
தப்ததாப ஹாரிணீம் நௌமி மங்களேச்வரீம்

अंबुजाक्षसोदरीं अंबुजासनेडिताम् ।
अक्षरादिरूपिणीं नौमि मङ्गळेश्वरीम् ।।२।।

அம்புஜாக்ஷஸோதரீம் அம்புஜாஸனேடிதாம்
அக்ஷராதிரூபிணீம் நௌமி மங்களேச்வரீம்

कण्ठहारशोभितां कुण्डलाद्यलंकृताम् ।
कञ्चुकादिभूषितां नौमि मङ्गळेश्वरीम् ।।३।।

கண்டஹாரசோபிதாம் குண்டலாத்யலங்க்ருதாம்
கஞ்சுகாதிபூஷிதாம் நௌமி மங்களேச்வரீம்

चारुचन्द्रशेखरां चन्दनाद्यलंकृताम् ।
चण्डमुण्डमर्दिनीं नौमि मङ्गळेश्वरीम् ।।४।।

சாருசந்த்ர சேகராம் சந்தனாத்யலங்க்ருதாம்
சண்டமுண்டமர்தினீம் நௌமி மங்களேச்வரீம்

कादिमन्त्ररूपिणीं कामराजपीठगाम् ।
कालकालनायिकां नौमि मङ्गळेश्वरीम् ।।५।।

காதிமந்த்ரரூபிணீம் காமராஜபீடகாம்
காலகாலநாயிகாம் நௌமி மங்களேச்வரீம்

भक्तपापहारिणीं भण्डदैत्यनशिनीम् ।
पुष्पबाणधारिणीं नौमि मङ्गळेश्वरीम् ।।६।।

பக்தபாபஹாரிணீம் பண்டதைத்யநாசினீம்
புஷ்பபாணதாரிணீம் நௌமி மங்களேச்வரீம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

पाकशासनार्चितां पाण्ड्यराजसेविताम् ।
हस्तपाशधारिणीं नौमि मङ्गळेश्वरीम् ।।७।।

பாகசாஸனார்ச்சிதாம் பாண்ட்யராஜஸேவிதாம்
ஹஸ்தபாசதாரிணீம் நௌமி மங்களேச்வரீம்

दृक्कटाक्षवीक्षणां भक्तवैरिशिक्षणाम्
सर्वजीवरक्षणां नौमि मङ्गळेश्वरीम् ।।८।।

த்ருக்கடாக்ஷவீக்ஷணாம் பக்தவைரி சிக்ஷணாம்
ஸர்வஜீவ ரக்ஷணாம் நௌமி மங்களேச்வரீம்

इक्षुचापधारिणीं इन्दुमण्डलप्रभाम् ।
इष्टसिद्धिदायिनीं नौमि मङ्गळेश्वरीम् ।।९।।

இக்ஷுசாபதாரிணீம் இந்துமண்டலப்ரபாம்
இஷ்டஸித்திதாயினீம் நௌமி மங்களேச்வரீம்

अंबुजासनस्थितां अण्डकोटिनायिकाम्
अङ्कुशाद्यलंकृतां नौमि मङ्गळेश्वरीम् ।।१०।।

அம்புஜாஸனஸ்திதாம் அண்டகோடிநாயிகாம்
அங்குசாத்யலங்க்ருதாம் நௌமி மங்களேச்வரீம்

चित्रवस्त्रधारिणीं चित्रमाल्यभूषिताम् ।
भुक्तिमुक्तिदायिनीं नौमि मङ्गळेश्वरीम् ।।२१।।

சித்ரவஸ்த்ரதாரிணீம் சித்ரமால்யபூஷிதாம்
புக்திமுக்திதாயினீம் நௌமி மங்களேச்வரீம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)